O.S.38-2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.38/2018

வாதி தரப்பு 1வது சாட்சி கண்ணன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கண்ணன் | வயது | : | 50/24 |
| தகப்பனார் பெயர் | : | கோவிந்தசாமி | தாலுகா | : | கறம்பக்குடி |
| கிராமம் | : | பொன்னன்விடுதி | தொழில் | : | சொந்த தொழில் |

நாள்-23.10.2024

வா.சா.1

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதி எனது மனைவி. நான் அவரது பவர் ஏஜெண்ட் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

2) எனது மனைவிக்கு சொந்த ஊர் பொன்னவிடுதி. எனது சொந்த ஊர் ஆவணம் அருகில் உள்ள துலுக்கவிடுதி.

3) எனது மனைவி 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை 2010ம் வருடம் அடமானமாக எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அதிலிருந்து 2018ம் வருடம் வரையிலும் நானோ, எனது மனைவியோ இந்த அடமானத்தை மீட்பதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

4) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு, வழக்கு பற்றி விபரங்களை வழக்கறிஞருக்கு விபரம் சொன்னது யார் என்றால் நான், எனது மனைவி மற்றும் எனது மாமனார் விபரம் சொன்னோம். என்ன நடந்ததோ அந்த விபரங்களை சொல்லித்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான்.

5) வழக்கு சொத்தை அடமானம் ஏற்படுத்தும்போது 1ம் பிரதிவாதி வரவில்லை என்றும், 2ம் பிரதிவாதிதான் வந்தார் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) வட்டிக்கு ரசீது போட வேண்டும் என்று சொல்லி 2ம் பிரதிவாதி அடமான தேதியில் வாதியிடம் வெற்று பேப்பரில் கையெழுத்து பெற்றுக்கொண்டார் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) வழக்குரை மற்றும் திருத்தப்பட்ட வழக்குரையில் 16.04.2013ல் ரூ.1000/-த்திற்கு கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நான்

தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் ரூ.1 லட்சம் கொடுத்ததாக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த பணத்தை கார்த்திகேயனிடம் கொடுத்தேன். கார்த்திகேயன் காயத்திரி பேஃப்ரிக்-ன் ஒர்க்கிங் பார்ட்னர். அவர் பார்ட்னர் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. கார்த்திகேயன் காயத்ரி பேஃப்ரிக் பார்ட்னர் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

8)காயத்ரி பேஃப்ரிக் என்பது 2ம் பிரதிவாதியின் தனி நிறுவனம் என்றாலும், அதில் யாரும் பார்ட்னர் இல்லை என்றால் சரியல்ல. ஒர்க்கிங் பார்ட்னர் என்பது கம்பெனியின் லாபத்தில் குறிப்பிட்ட சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கப்படும். அவர்களைத்தான் ஒர்க்கிங் பார்ட்னர் என்போம். அவர்கள் விடுமுறை நாட்களில்தான் வேலை செய்வார்கள்.

9) கார்த்திகேயன் காயத்ரி பேஃப்ரிக் -ல் ஒர்க்கிங்க பார்ட்னர் என்று சொல்வதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கார்த்திகேயனிடம் பணம் கொடுக்க சொல்லி எனக்கு எழுத்து மூலமாக அறிவுறுத்தினாரா என்றால் இல்லை. நான் கார்த்திகேயனுக்கு நான் பணம் அனுப்பிய விபரத்தை 2ம் பிரதிவாதிக்கு எழுத்து மூலமாக தகவல் அனுப்பினேனா என்றால் இல்லை.

10) வழக்குரையிலோ, அறிவிப்பிலோ 2ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பவர் செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்டது என்று 1ம் பிரதிவாதிக்கோ, 2ம் பிரதிவாதிக்கோ தபால் அனுப்பினேனா என்று விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் 1ம் பிரதிவாதியை நான் சந்திக்கவே இல்லை. அவரை எவ்வாறும் நான் தொடர்பு கொள்ளவில்லை. அவரது தொலைபேசி எண் என்னிடம் இல்லை.

11) 2ம் பிரதிவாதிக்கு உங்களை நான் செக்யூரிட்டிக்காக உங்களுக்கு பவர் கொடுத்தேன் என்ற விபரத்தை தபால் மூலமாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அடமான பத்திரத்தில் 1ம் பிரதிவாதியின் முகவரி உள்ளது என்றால் சரிதான். அந்த முகவரி கண்டுதான் அடமான பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு நீங்கள் அடமானத்தின்போது வரவில்லை. ஆனால் உங்கள் பெயருக்கு ஒருஅடமானமும், உங்களது மைத்துனர் பெயருக்கு பவரும் எழுதி கொடுத்துள்ளேன் என்று அவரிடம் தகவல் சொன்னேனா என்றால் இல்லை.

12) 2017-2018 வருடத்திற்குரிய விற்பனை மற்றும் கொள்முதல் ரசீதுகளைத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 2010- 2013 வருடங்களுக்கான விற்பனை மற்றும் கொள்முதல் ரசீதுகளை தாக்கல் செய்யதுள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வரி இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

13) 2010-2015 ஆண்டுகளுக்கான எனக்கு பொருட்கள் அனுப்ப சொல்லி கேட்ட, மற்றும் நான் கொடுக்க அனுப்பியதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

14) கொள்முதல் ஆவணம் மட்டும் தாக்கல் செய்துவிட்டு, சப்ளை செய்ததற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். நான் ஆரம்பத்தில் கரூரில் அட்லஸ் எக்ஸ்போர்ட்ஸ் எண்டர்பிரைசஸ்-ல் வேலை செய்துவந்தேன். அது துணிகள் தயாரிக்கும் நிறுவனம் என்றால் சரிதான். அங்கு வேலை பார்த்தபின் 2000ம் வருடம் டெல்லியில் வேலை பார்த்தேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.